RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-69 | 15 மார்ச் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழக பட்ஜெட் முக்கிய அம்சங்கள்





சென்னை, மார்ச்.15

சென்னை 2025-26ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இன்று (மார்ச் 14) காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். தமிழக பட்ஜெட் உரையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளின் முக்கிய அம்சங்கள்...

* முதல்வர் கிராம சாலை திட்டத்தின் கீழ் 6,100 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம சாலைகள் 2,100 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

* 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

* அரசு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்படும்.

* அரசுப் பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் (Centre of Excellence) ரூ.50 கோடி செலவில் உருவாக்கப்படும்.

* நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான தர வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள்ளும், உலக அளவிலான ஙிஷி தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள்ளும் அண்ணா பல்கலைக்கழகத்தை இடம்பெறச் செய்திடச் செயல்திட்டம் உருவாக்கப்படும்.

* 1 லட்சம் மகளிரைத் தொழில் முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் செயல்படுத்தப்படும்.

* அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பப்படி கைக் கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்.

* பத்து லட்சம் வரை மதிப்புள்ள அசையா சொத்துகளைப் பெண்கள் பெயரில் பதிவு செய்தால் 1% பதிவுக் கட்டணம் குறைக்கப்படும்.

* அரசு அலுவலர்கள் ஈட்டிய விடுப்பு 15 நாள்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் நடைமுறை மீண்டும் செயல்படுத்தப்படும்.

* நகர்ப்புறப் பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய புதிய திட்டம் ரூ.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

* ஒரகடம் செய்யாறு தொழில் வழித்தடம் ரூ.250 கோடியில் செயல்படுத்தப்படும்.

* ரூ.150 கோடியில் புராதானக் கட்டிடங்கள் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்

* திருவான்மியூர் உத்தண்டி நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை 14.2 கி.மீ நீளம்

* ரூ.2,100 கோடியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் சீரமைக்கப்படும்.

* ரூ.50 கோடியில் விசைத்தறி நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

* பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கைக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

* பெற்றோர் இருவரையும் இழந்த 50,000 குழந்தைகளுக்கு 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும்.

* ரூ.125 கோடியில் ஆயிரம் ஆண்டு பழமையான கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ளப்படும்.

* பழமையான தேவாலயங்களைப் புதுப்பிக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

* சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள் வழங்கப்படும். 10 ஊராட்சிகளுக்கு தலா ரூ.1 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

* அனைத்து மாநகராட்சிகளிலும் முதல்வர் படைப்பகம் அமைக்கப்படும். 30 இடங்களில் ஒரு மையத்துக்கு தலா ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

* ரூ.50 கோடியில் வியன் திறன்மிகு மையம் அமைக்கப்படும்.

* கோவை சூலூர், பல்லடத்தில் தலா 100 ஏக்கர் பரப்பளவில் செமிகண்டக்டர் இயந்திரத் தொழிற்பூங்கா அமைக்கப்படும்.

* ரூ.350 கோடியில் கோவளம் உப வடிநிலத்தில் புதிய நீர்த்தேக்கம் கட்டப்படும்.

* ரூ.11,721 கோடியில் புதிய புனல் மின் நிலையங்கள் அமைக்கப்படும். இவற்றில் வெள்ளிமலை 1,100 மெகாவாட் திறன் ஆழியாறு 1,800 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும்.

* 4,000 மெகாவாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்பு அமைப்புகள் உருவாக்கப்படும்.

* கடல்சார் வள அறக்கட்டளை ரூ.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

* 6 கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் பெற முயற்சி மேற்கொள்ளப்படும்.

* ரூ.70 கோடியில் 700 டீசல் பேருந்துகள் இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பேருந்துகளாக மறுசீரமைக்கப்படும்.

* ரூ.1 கோடியில் வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

* 1,125 மின் பேருந்துகள் அறிமுகம் செய்யப்படும். இவற்றில் சென்னை: 950, மதுரை: 100, கோயம்புத்தூர்: 75 பேருந்துகள் இயக்கப்படும்,

* ரூ.100 கோடியில் சென்னை அறிவியல் மையம் அமைக்கப்படும்.

* விண்வெளித் தொழில்நுட்ப நிதி ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

* ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.

* ரூ.152 கோடியில் 10 புதிய அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும்.

புதிய வேலைவாய்ப்புகள்: * ரூ.366 கோடியில் சிட்கோ 9 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும். இதன் மூலம் 17,500 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

* 250 ஏக்கரில் திருச்சியில் பொறியியல் மற்றும் வார்ப்பகத் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதன்மூலம், 5,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

* ரூ.250 கோடியில் மதுரை, கடலூரில் காலணித் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதன்மூலம், 20,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

* ரூ.50 கோடியில் தமிழ்நாடு செமிகண்டக்டர் இயக்கம் 2030 செயல்படுத்தப்படும்.

* முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்துக்கு ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம், அரசு உதவிபெறும் பள்ளிகள் 1ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை மேலும் 3.14 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுவர்.

* 2,000 தற்சார்புத் தொழிலாளர்களுக்கு இருசக்கர மின் வாகனம் வாங்க தலா ரூ.20,000 மானியம் வழங்கப்படும்.

* ரூ.120 கோடியில் காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

* ரூ.100 கோடியில் சென்னை, கோயம்புத்தூரில் அடிப்படை அறிவியல் - கணித ஆராய்ச்சிப் படிப்புகள் மையம் உருவாக்கப்படும்.

* ரூ.160 கோடியில் 2,000 பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் தரம் உயர்த்தப்படும்.

* ரூ.56 கோடியில், 880 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் தரம் உயர்த்தப்படும்.

* ரூ.65 கோடியில், 2,676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் தரம் உயர்த்தப்படும்.

மகளிர் நலன் * ரூ.77 கோடியில் மேலும் 10 இடங்களில் 800 பணிபுரியும் பெண்கள் பயனடையும் வகையில் தோழி விடுதிகள் உருவாக்கப்படும்.

* சென்னை, கோவை, மதுரையில் தலா 1,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ.275 கோடியில் மாணவியர் விடுதிகள் உருவாக்கப்படும்.

* 10,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். இவற்றின் மூலம் ரூ.37,000 கோடி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.

* மகளிர் விடியல் பயண திட்டத்துக்கு ரூ.3,600 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

* கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு ரூ13,807 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை பலன்பெறாதோருக்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* ரூ.6,668 கோடியில் 7 மாவட்டங்களில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 29.74 இலட்சம் மக்கள் பயன்பெறும்.

* நகர்ப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

* சென்னைக்கு அருகில் உலகத் தர வசதிகளுடன் புதிய நகரம் அமைக்கப்படும்.

* சென்னை வேளச்சேரியில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்படும். இதன் மூலம் 7 இலட்சம் பேர் பயன் பெறுவர்,

*ரூ.2,423 கோடியில் சென்னையில் சீராகக் குடிநீர் விநியோகித்திட முதன்மைச் சுற்றுக்குழாய்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

*முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6100 கி.மீ. நீளம் சாலை அமைக்கப்படும், இதற்காக ரூ.2,200 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

* ரூ.400 கோடியில் திருச்சி, மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் - திருநெல்வேலி மாநகராட்சிகளில் நதிக்கரை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* ரூ.675 கோடியில் 40 ஆண்டுகள் பழமையான 102 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மறுசீரமைக்கப்படும்.

* ரூ.88 கோடியில் சென்னை பெருநகரப் பகுதிகளில் மழைநீர் உறிஞ்சும் 7 பல்லுயிர்ப் பூங்காக்கள் (Sponge Park) அமைக்கப்படும்.

* கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3,500 கோடியில் ஊரகப் பகுதிகளில் 1 இலட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும்.

* சீரமைக்க இயலாத வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் என்ற வகையில் ரூ.600 கோடியில் 25,000 வீடுகள் கட்டித்தரப்படும்.

* ஆண்டுதோறும் உலகத் தமிழ் ஒலிம்பியாட் போட்டி நடத்தப்படும். ரூ.1 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும்.

* ஐ.நா. அவை அங்கீகரித்துள்ள 193 மொழிகளுக்கும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமை பெறுகிறது திருக்குறள்..மேலும் 45 உலக மொழிகளில் திருக்குறள்

* சிங்கப்பூர், துபாய், மலேசியாவில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி நடத்த ரூ.2 கோடி ஒதுக்கப்படும்.

* தமிழ்நாடு முழுவதும் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ள ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

* கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

* ரூ.40 கோடியில் எழும்பூர் அருங்காட்சியகத்தில் ஐம்பொன் மற்றும் செப்புத் திருமேனிகள் காட்சிக்கூடம் அமைக்கப்படும்.

* ஈரோடு மாவட்டம் நொய்யல், ராமநாதபுரம் மாவட்டம் நாவாப் பகுதிகளில் அருங்காட்சியங்கள் அமைக்கப்படும்.

சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு நடுவே, இந்த பட்ஜெட் தாக்கலாகி உள்ளது. இது, நிதி அமைச்சராக தங்கம் தென்னரசு தாக்கல் செய்துள்ள 2வது பட்ஜெட் ஆகும். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருப்பொருளில் இந்த பட்ஜெட்டை அமைச்சர் தாக்கல் செய்துள்ளார்.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளதால், அடுத்த ஆண்டில் இடைக்கால பட்ஜெட்டாக மட்டுமே தாக்கல் செய்ய முடியும். அந்த வகையில், இன்றைய பட்ஜெட்தான் இந்த அரசு தாக்கல் செய்யும் 5வது மற்றும் முழுமையான பட்ஜெட் ஆகும்.

பட்ஜெட் உரையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, "இந்தியாவின் 2வது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழகம் என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், 'பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழகம் முன்னேறி வருகிறது.

மனிதநேயம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு நடைபோடுகிறது. சமநிலை தவறாமல் தமிழகத்தை வழிநடத்துவோம்." என்றார்.

அதாவது "சமநிலையின்மை என்பது ஒரு வாய்ப்பு. ஆனால் நாம் வேறு பாதையை தேர்வு செய்வோம்." என்ற பொருளியல் அறிஞர் தாமஸ் பிக்கெட்டியின் மேற்கோளை நிதியமைச்சர் பயன்படுத்தினார்.

நிதியமைச்சர் பட்ஜெட் உரையை வாசிக்கத் தொடங்கியதும், அதிமுக எம்எல்ஏ.க்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

## 18ல் கட்சிகளுடன் தேர்தல் அதிகாரி ஆலோசனை

சென்னை, மார்ச்.15



தமிழகத்தில் தேர்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வரும் மார்ச் 18ம் தேதி தலைமை செயலகத்தில் அனைத்துக் கட்சி ஆலோசனைக்கூட்டம் நடத்த தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தேசித்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 3.11 கோடி ஆண் வாக்காளர்கள், 3.24 கோடி பெண் வாக்காளர்கள், 9,120 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிக்க 68 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இந்திய தேர்தல் ஆணைய தலைமை தேர்தல் ஆணையராக பொறுப்பேற்றுள்ள ஞானேஷ் குமார், அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தொடர்ந்து ஆலோசனை கூட்டம் நடத்தி, ஆலோசனைகளைப் பெற்று, சட்ட விதிகளுக்கு உட்பட்டு தீர்வுகாண வேண்டும். அது தொடர்பான விவரங்களை மார்ச் 31ம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி யுள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வரும் 18ம் தேதி ஆலோசனை நடத்த உத்தேசித்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இக்கூட்டத்தில் திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட 14 கட்சிகளின் பிரதி நிதிகள் பங்கேற்க உள்ளனர். இதில் முதன்முறையாக நாம் தமிழர் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்க இருப்பது குறிப்பிடத் தக்கது. இக்கூட்டத்தில் ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது, இறந்தவர்கள் பெயர்களை நீக்காமல் இருப்பது உள்ளிட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள், வாக்குச்சாவடிகள் அமைவிடம் தொடர்பான ஆட்சேபனைகள், தேர்தல் நடத்தை விதிகளை முறையாக அமல்படுத்துவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்க இருப்பதாக கூறப்படுகிறது.




நீலகிரி மாவட்டம் உதகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பாக CPS ஒழிப்பு இயக்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

## ஆன்லைன் விளையாட்டு மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க அவகாசம்

சென்னை, மார்ச்.15



தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு ஆதார் இணைப்பை கட்டாயமாக்கியும், நேர கட்டுப்பாடு விதிக்கப்பட்டதையும் எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க மார்ச் 21ம் தேதி வரை அவகாசம் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகள் ஒழுங்குமுறை சட்டம் கடந்த 2022ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 'அதிர்ஷ்டத்துக்கான ஆன்லைன் விளையாட்டுகளை தமிழக அரசு தடை செய்தது செல்லும். ஆனால் திறமைக்கான ஆன்லைன் விளையாட்டுகளான ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகளை தடை செய்தது செல்லாது' என்று தீர்ப்பளித்தது.

மேலும், ஆன்லைன் ரம்மி போன்றவற்றை விளையாடுவதற்கு வயது, நேரம் ஆகியவற்றில் கட்டுப்பாடு விதிக்கலாம் என்றும் உத்தரவிட்டது.

அதன்படி, தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் புதிதாக விதிமுறைகளை வகுத்து தமிழக அரசு கடந்த பிப்ரவரி 14ம் தேதி அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டது. அதில், ஆன்லைன் விளையாட்டுகளை விளையாட ஆதார் இணைப்பை கட்டாயமாக்கியும், நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஆன்லைனில் விளையாட முடியாதபடி நேர கட்டுப்பாடு விதித்தும் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து பல்வேறு தனியார் ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம் இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க உத்தரவிட்டது.

இந்நிலையில், நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.ராஜசேகர் அமர்வில் இந்த வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, இந்த வழக்கில் மத்திய, மாநில அரசுகள் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மார்ச் 21ம் தேதிக்குள் மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தனர்.

# கருக்கம்பத்தூர் ஆஜிபுரா பகுதியில் தெருவின் மத்தியில் கரண்ட் கம்பம் வைத்து சிமெண்ட் சாலை போட்ட அதிமேதாவிகள்.. அவசரத்திற்கு ஆம்புலன்ஸ் கூட நுழைய முடியாமல் தத்தளிக்கும் பொதுமக்கள்

வேலூர் மார்ச் 15




வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், கருகம்பத்தூர், ஆஜிபுரா பகுதியில், சுமார் 2000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து இந்த சாலை வழியாக கடந்து செல்கின்றனர். சுமார் 10,000 க்கும் மேற்பட்ட பள்ளிக் கல்லூரி மாணவர்கள் கடந்து செல்லும் வழி தளமாகும். இந்த தெருவில் பல ஆண்டுகளாக தெருவின் மத்திய பகுதியில் மின்கம்பம் அமைத்துள்ளனர். பொதுமக்கள், இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சித் துறை நிர்வாகம் மின்கம்பத்தை நடுவிலே அமைத்தபடி அதை அப்படியே விட்டு சாலையின் மத்தியில் மின்கம்பத்தை வைத்து சிமெண்ட் சாலை அமைத்த அதிமேதாவிகளை இங்கு காணலாம், ஒரு அவசரத்திற்கு கூட ஆம்புலன்ஸ்கள் நுழைய முடியாமல் தெரு சாலையின் மத்தியில் மின் கம்பம் உள்ள நிலையில் இப்பகுதி பொதுமக்கள் யாருக்கேனும் ஏதாவது அவசரம் என்றால் ஆம்புலன்ஸ் வரக்கூட வழியில்லை என தத்தளித்து வருகின்றனர். இந்த வழியாக ஆட்டோக்கள் கூட உள்ளே சென்று வெளியில் வர மிகுந்த சிரமத்திற்குள்ளாகி அவதிப்பட்டு வருகின்றனர். தற்போது அனைத்து துறைகளிலும் புரோக்கர்கள் மூலம் லஞ்சம் பெறுவதும் தலைவிரித்தாடி வருகிறது. இங்கு புரோக்கர்களை வைத்து மக்களிடம் வசூல் செய்து தாருங்கள் என்று பெரிய அளவில் லஞ்சம் எதிர்பார்த்து சம்பந்தப்பட்ட நிர்வாகமே நடவடிக்கை எடுக்காமல் பொதுமக்களை வஞ்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து பகுதி மக்கள் பலமுறை மின்துறையிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், வரி வசூல்களுக்கும் மற்ற இதர வரி வசூல்களுக்கு மட்டும் வந்து வசூல் செய்து இது போன்ற அவல நிலையை சரி செய்து தாருங்கள் என்று கேட்டால் அவர்களை எந்த நல்ல திட்டங்களையும் பொதுமக்களுக்கு செய்வதை தடுப்பதும் பல்வேறு இன்னல்களை கொடுத்து, துன்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் சம்பந்தப்பட்ட மின் துறைக்கு, நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து இருந்த நிலையில், அந்த மனுவானது 20 நாட்களுக்கு மேலாகியும் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு மின்சாரத்துறைக்கு பார்வர்ட் ஆகவில்லை என்று தெரிவிக்கின்றனர். இதுகுறித்து தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் நலன் கருதி அவசரத்திற்கு ஆம்புலன்ஸ்கள் வந்து போகும் அளவில் இந்த கம்பத்தை அகற்றி ஒதுக்குப்புறமாக மின் கம்பத்தை நட்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் நடமாட்டத்திற்கு ஏதுவாகவும் இந்த அரசு அமைத்து தர கோரிக்கை வைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இதுபோன்ற ஒப்பந்ததாரர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கும் வகையில் ஒப்பந்ததாரர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்த பார்வையாளர் அரசு ஊழியர் மீதும் சம்பந்தப்பட்ட துறை அரசு உயர் பதவி ஊழியர் மீதும் தகுந்த சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடுமையான கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ் சாலையில் குட்டியுடன் ஆறு காட்டு யானைகள் சாலையில் முகாமிட்டு உள்ளதால் வாகன ஓட்டிகள் கவனமாக செல்ல வேண்டும் என குன்னூர் வனச்சரகர் ரவீந்திரநாத் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென கூறியுள்ளார்.

# சிவகங்கை கீழக்கோட்டையில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

சிவகங்கை மார்ச் 15



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் நடைபெற்றது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி வசந்த மலர் பள்ளி மேலாண்மைக் குழு தலைவி நித்யா முன்னிலை வகித்தனர். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்றார். பள்ளி மாணவர் சேர்க்கை பள்ளி ஆண்டு விழா புரவலர்கள் சேர்க்கை குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. முன்னதாக மாணவ மாணவிகளுக்கு எழுதும்பொருட்கள் அடங்கிய பௌச்யை ராமசந்திரன் வழங்கினார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியைகள் கமலாபாய் வாசுகி வித்யா ஆலோசனை வழங்கினர். பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 14 மண்டலம் குழு தலைவர் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர், பெருங்குடி எஸ் .வி.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி கல்வி குழு தலைவர், 181வது வார்டு மாமன்ற உறுப்பினர் ,பாலவாக்கம். விசுவநாதன் முன்னிலையில் அதிகாரிகள் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இதில் பெருநகர சென்னை மாநகராட்சி புழுதிவாக்கம் 186வது வார்டு மாமன்ற உறுப்பினர், வரிவிதிப்பு (ம) நிதிக்குழு உறுப்பினர், 186வது வட்டக் கழக செயலாளருமான ஜே.கே.மணிகண்டன் புழுதிவாக்கத்தில் நடைபெற்ற வரும் பணிகளை தாமதப்படுத்தாமல் மிக விரைந்து முடித்து தருமாறு வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# PSY கல்லூரியில் வணிக கணினி-வணிக வேளாண்மை துறை சார்பில் தேசிய கருத்தரங்கு

சிவகங்கை மார்ச்.15



நிஷிசீ கல்லூரியில் வணிக கணினி மற்றும் வணிக வேளாண்மை துறை சார்பில் தேசிய கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது

சிவகங்கை மாவட்டம் அரசனூர் (நிஷிசீ)பாண்டியன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிக கணினி பயன்பாடு மற்றும் வணிக வேளாண்மை துறை சார்பில் வணிகவியல் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியை மதுபாலா வரவேற்பு உரையாற்றினார், வணிகவியல் கணினி பயன்பாடு துறை தலைவர் தங்கப்பாண்டி கருத்தரங்கு தொடக்க உரையாற்றினார். கல்லூரியின் நிறுவனர் மற்றும் செயலர் இந்து ரத்தன் மலேசியா பாண்டியன் தலைமை வகித்தார்.




கல்லூரி நிர்வாக இயக்குனர் பொறியாளர் ஷி.றி வரதராஜன் சிறப்புரையாற்றினார். பாண்டியன் சரஸ்வதி பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரவீந்திரன் மற்றும் பாண்டியன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் வி. கண்ணன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக தலைவர் பிரபு ராம் ராமசாமி செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டு நெறிமுறைகளை குறித்து மாணவர்களிடம் விளக்கிப் பேசினார். அதனைத் தொடர்ந்து மன்னர் துரை சிங்கம் அரசு கலைக்கல்லூரி வணிகவியல் துறை இணை பேராசிரியர் செண்பகநாதன் நவீன வணிகத்தில் நுண்ணறிவின் முன்னேற்றங்கள் குறித்து பேசினார். இந்துஸ்தான் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி உதவி பேராசிரியர் ராம்கி செயற்கை நுண்ணறிவின் புதுமையான நடைமுறைகளை குறித்து பேசினார்.

வணிக மேலாண்மை துறை தலைவர் முனைவர் ஸி. பொன் முத்துராமலிங்கம் நன்றி உரையாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாண்டியன் சரஸ்வதி கலைக்கல்லூரி வணிக கணினி பயன்பாடு மற்றும் வணிக மேலாண்மை துறை சார்ந்த உதவி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர்..

# மானாமதுரையில் தியான மடத்தில் சர்வதேச மகளிர் தின விழா.!

மானாமதுரை மார்ச்15




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே பீசர்பட்டினம் தியான மடம் செயல்பட்டு வருகிறது. இந்த தியான மடத்தில் ஹார்ட் ஃபுல்னெஸ் கல்வி நிறுவனம், ஸ்ரீராம் சந்த்ரா மிஷின் மலரும் மகளிர் இதயங்கள் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா(மார்ச் 8)கொண்டாட்டம் நடந்தது. சர்வதேச மகளிர் தின விழாவில் பங்கேற்ற மானாமதுரை தபால்துறை அஞ்சலக தலைமை போஸ்ட் மாஸ்டர் எஸ்.தர்மாம்மாள் தலைமை ஏற்றார். ரேவதி மருத்துவமனை பாலம்மாள்ஸ்ரீ சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புறையுற்றினர்.சர்வதேச மகளிர் தினத்தை மூன்னிட்டு அஞ்சலக தலைவர் மகளிர் தின விழா என்றால் என்ன என விளக்கி பேசினார்.

பெண் அதிகாரம் என்றால் என்ன ?பெண்களுக்கான சம உரிமை மற்றும் சமுதாயத்தை பெண்கள் படிக்க வேண்டும் பெண்கள் கட்டாயமாக கல்வி கற்க வேண்டும் !பெண்களுக்கு, ஆண்களுக்கும் சம உரிமை உண்டு என சிறப்பாக விளக்கி எடுத்துரைத்தார். இந்த மகளிர் தின விழாவில் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் தங்களுடைய தனித்திறமைகளை வெளிகாட்டி சிவகங்கை சீமை வீரமங்கை வேலுநாச்சியாரின் வரலாற்றின் சிறப்புகளை மாணவிகள் அரங்கத்தில் எடுத்துறைத்தனர். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கில் தாய்,மகள் இருவரும் சேர்ந்து நடனம் ஆடினார். இந்த நடனத்தை கண்டு பார்வையாளர்கள் வியர்ந்து ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தனர். கலை நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்தது. இதில் ஏராளமான தியான நிகழ்ச்சி புதிதாக பங்கேற்றவர்களுக்கு கௌவர படுத்தினர். மகளிர் தின நிகழ்வில் பெரியவர்கள் சிறியவர்கள், பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

# செம்பாக்கத்தில் நாடாளுமன்ற தொகுதி மறு சீரமைப்பை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்



காஞ்சிபுரம் மார்ச்.15

காஞ்சிபுரம் வடக்கு செம்பாக்கம் பகுதி சார்பில் ஒன்றிய மோடி அரசு கொண்டு வரும் நாடாளுமன்ற தொகுதி மறு சீரமைப்பை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் காமராஜபுரம் பஸ் நிலையம் அருகில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் செம்பாக்கம் பகுதி செயலாளர் இரா.சுரேஷ் தலைமையில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன், மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலஷ்மி மதுசூதனன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, கழகத்தின் இளம் பேச்சாளர்களும் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரையாற்றினார்.

உறுதிமொழி ஏற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், மாவட்ட தலைமை குழு உறுப்பினர் அன்பு செழியன், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர கழக நிர்வாகிகளும் வட்ட கழக நிர்வாகிகளும் பொது மக்களும் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்..

# பம்மல் பசும்பொன் நகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 2வது ஆண்டு மாசி மாத பௌர்ணமி தீமிதி திருவிழா

பம்மல் மார்ச் 15



பம்மல் பசும்பொன் நகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 2 வது ஆண்டு மாசி மாத பௌர்ணமி தீமிதி திருவிழா, காளிவேடமிட்டு அம்மன் ஊர்வலம் சென்று பக்தர்களுக்கு ஆசிவழங்கினார்.

சென்னை பல்லாவரம் அடுத்த பம்மல் பசும்பொன் நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 2 ஆம் ஆண்டு மாசிமாதம் பௌர்ணமி தீமிதி திருவிழா, ஆலய நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் வெகுவிமர்சியாக கொண்டாடபட்டது.

11 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் 9 ஆம் நாளன்று வல்லாளராஜாவை அழித்து ஸ்ரீ காளி அம்மனாக வடிவம் கொண்டு தரை, தப்பட்டை முழங்க ஊர்வமாக சென்று பக்தர்களுக்கு ஆசிவழங்கி ஆலயம் வந்தடைந்தனர். இதனை தொடர்ந்து மாலை சூரியம்மன் ஆலயத்தில் இருந்து 500 க்கு மேற்பட்ட பக்தர்கள் ஊர்வலமாக சென்று முத்துமாரி அம்மன் நேரடி பார்வையில் தீமிதித்து நேர்த்தி கடன் செலுத்தி அம்மனை தரிசனம் செய்தனர்.

தீமிதி திருவிழாவில் அப்பகுதி சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு. திருவிழா முன்னிட்டு பாதுகாப்பிற்க்காக ஏராளமான போலிசார் குவிக்கபட்டனர். இதில் ஆலய நிர்வாகிகள் தர்மகத்தா மகேந்திரன், ஆலோசகர் கெஜேந்திரன், தலைவர் மருதவானன், துனைத் தலைவர் ரகுராமன், செயலாளர் ஜெகன், துனைச் செயலாளர் அகிலன், தீவன்ராஜ், பொருளாளர் முத்துக்குமரன் மற்றும் ஊர் பொதும்ககள் கலந்து கொண்டனர்.

## காரைக்குடி இராஜ ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி சார்பில் இயற்கை வேளாண்மை குறித்த கருத்தரங்கம்




காரைக்குடி மார்ச்.15

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி இராஜ ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் வேளாண் பொறியியல் துறை சார்பில் இயற்கை வேளாண்மை குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் சொ. சுப்பையா வழிகாட்டுதலின் படி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இயற்கை வேளாண்மைநிபுணர் முனைவர் கூஷி.கருப்பு ராஜ் பங்கேற்று இயற்கை வேளாண்மை மற்றும் அதன் முக்கியத்துவத்தை குறித்தும் பல தகவல்களை வழங்கினார். அவர் பேசுகையில் " நம் பாரம்பரியத்தின் ஒரு அங்கமான இயற்கை வேளாண்மையை மாணவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" என அறிவுரை வழங்கினார். முன்னராக வேளாண் பொறியியல் துறை தலைவர் முனைவர் சாரதி வரவேற்புரையாற்றினார்.பின்னர் ரி.சி.பழனிவேல் வாழ்த்துரை வழங்கி விழாவை துவங்கி வைத்தார் .இந்நிகழ்வில் பல மாணவர்கள் பங்கு பெற்று இயற்கை வேளாண்மை குறித்த பல தகவல்களை தெரிந்து கொண்டனர். இந்நிகழ்வின் நிறைவுப்பகுதியாக கல்லூரி முதல்வர் வி. சிவகுமார் அறிவுறுத்துதலின்படி பங்குபெற்ற மாணவர்களுக்கு கல்லூரி துணை முதல்வர் கூஷி மகாலிங்க சுரேஷ் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்..



கேரளா திருவனந்தபுரத்தில், நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக, சென்னையில் நடைபெற உள்ள கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் பங்கேற்கக் கோரி, கேரளா முதலமைச்சர் பினராயி விஜயனை, தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சார்பில், தகவல் தொழில் நுட்பத்துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தென் சென்னை எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் சந்தித்து, அழைப்பு விடுத்தனர்.

## திண்டுக்கல்லில் இயற்கை சந்தை விற்பனை கண்காட்சி மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியர் அழைப்பு

திண்டுக்கல், மார்ச்.15

திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மகளிர் விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு சந்தைப்படுத்திட ஏதுவாக மகளிர் திட்டத்தின் மகளிர் விவசாயிகளை ஒன்றிணைத்து அவர்கள் மூலம் இயற்கை முறையில் விளைவித்த பொருட்களை சந்தைப்படுத்துதலுக்காக திண்டுக்கல் கட்டாஸ்பத்திரி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள இடத்தில் 15.03.2025 அன்று காலை 07.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை இயற்கை சந்தை விற்பனை கண்காட்சி நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மகளிர் விவசாயிகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் இயற்கை முறையில் விளைவித்த காய்கறிகள், பழவகைகள், கீரைகள், மூலிகை வகைகள், வாழைப்பழம், வாழைப்பூ, பாரம்பரிய அரிசி வகைகள் வேர்க்கடலை, எள்ளு, தேங்காய், வேர்க்கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், எள் எண்ணெய், வெல்லம், பாரம்பரிய அரசியில் செய்த அவல் வகைகள், நாட்டுக்கோழி, நாட்டுக்கோழி முட்டைகள், நாட்டு சர்க்கரை, தேன் போன்றவற்றையும் மற்றும் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும் விவசாயிகள் நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதற்கு உரிய அரங்குகள் அமைக்கப்படவுள்ளது. எனவே, மேற்படி இயற்கை சந்தையில், பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தாராபுரம் ரோடு வெள்ளியங்காடு பகுதியில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் ஆய்வு மேற்கொண்டார். உடன் மேலாண்மை இயக்குநர் (திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு கடன் சங்கம்) ரா.சரவணக்குமார் . மருந்தக கடையின் உரிமையாளர் சா.செல்சியா மற்றும் அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் வி.டி.பாண்டியன் தேவர்,லயன்ஸ் கிளப் ஆப் திருப்பூர் பாண்டியன் பட்டய செயளாலர் வெ.சாமிநாதன், துணைப் பொதுச் செயலாளர் போலீஸ் கார்த்திக் தேவர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலகு நிர்வாக நலன் கருதி வட்டாட்சியர்களை பணியிட மாறுதல் செய்து மாவட்ட ஆட்சியர் நேற்று உத்தரவிட்டார் இதன்படி இராமநாதபுரம் வட்டாட்சியர் ரவி டாஸ்மாக் கிடங்கு மேலாளராகவும் ஆர் எஸ் மங்கலம் வட்டாட்சியர் வரதராஜன் டாஸ்மாக் கிடங்கு உதவி மேலாளராகவும் இராமநாதபுரம் வட்டாட்சியர்( ச.பா.தி) பழனிக்குமார் குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர் என 13 பேர் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்புக் குழு மற்றும் காரைக்குடி வட்ட சட்டப் பணிக் குழுவும் இணைந்து நடத்திய போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம் மற்றும் கணினி அறிவியல் துறைத் தலைவர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தனர். காரைக்குடி வட்ட சட்டப் பணிக் குழு சார்பாக வழக்கறிஞர் சேதுராமன் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து சிறப்புரையாற்றினார். விழாவில் வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் முனைவர் குணசேகரன் முனைவர் வேலாயுதராஜா மற்றும் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

## கிழக்கு தாம்பரததில் தாம்பரம் தெற்கு பகுதி மகளீர் அணி செயலாளர் இல்ல திருமண விழாவில் மண மக்களை வாழ்த்திய தேமுதிக பிரமுகர்கள்



தாம்பரம் மார்ச்.15

கிழக்கு தாம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர தெற்கு பகுதி மகளீர் அணி செயலாளர் டாக்டர். டி.சுமதி தங்கம் அவர்களின் இல்ல திருமண விழா நடைபெற்றது. இவ்விழாவில் தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக செயலாளர் கேட்.எம்.தர்மா தலைமையில்,தாம்பரம் பொது குழு உறுப்பினர் டி.எஸ்.சரவணன், தெற்கு பகுதி பொருளாளர் லோகநாதன், மாவட்ட மகளீர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை செயலாளர் அபிநயா ஆகியோரின் முன்னலையில், தெற்கு பகுதி துணை செயலாளர்கள் ஏழுமலை, தமிழரசி, ஐ.கே.தர்மா, மாநகர பிரதிநிதி பாலமுருகன்,மாவட்ட பிரதிநிதி வீரப்பன், நெரும்பூர் ராஜேந்திரன், தெற்கு பகுதி மகளீர் அணி துணைச் செயலாளர்கள் திலகா, ரம்யா, 62, வது வட்ட செயலாளர் இளங்கோ ஆகியோரின் வரவேற்புரையில் மாநில இளைஞர் அணி தேமுதிக செயலாளர் புரசை கு.நல்லதம்ப, செங்கல்பட்டு மாவட்ட தேமுதிக செயலாளர் அனகை முருகேசன், துணை செயலாளர் மா.செழியன் ஆகியோர் மண மகன் சூர்யா " மண மகள் கோமலீஸ்வரி ஆகியோருக்கு திருமண வாழ்த்துக்கள் தெரிவித்தனர். முன்னாதாக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேமுதிக கட்சி கொடி ஏற்றி வைத்து மகளீர்களுக்கு நல திட்ட உதவிகள் மாநில இளைஞர் அணி தேமுதிக செயலாளர் புரசை கு.நல்லதம்ப, செங்கல்படடு மாவட்ட தேமுதிக செயலாளர் அனகை முருகேசன் ஆகியோர் வழங்கினர்..

## புதுச்சாவடி ஊராட்சி பகுதியில் பள்ளி செல்லாத குழந்தைகள் கணக்கெடுக்கும் பணி





அரியலூர் மார்ச் 15

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஒன்றியம் புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இடைநின்ற மாணவர்களை கண்டறிந்து பள்ளியில் சேர்க்கும் பணி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி வட்டார கல்வி அலுவலர் ராசாத்தி வட்டார வள மைய மேற்பார்வையாளர் கண்ணதாசன் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுனர் ஐயப்பன் மற்றும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் செங்குட்டுவன் ஆகியோர் பள்ளி தலைமை ஆசிரியர் சாந்தி தலைமையில் பள்ளிக்கு நீண்ட நாள் வருகை புரியாத மாணவர்களை கண்டறியும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது எட்டாம் வகுப்பு பயிலும் சபரி என்ற மாணவர் கண்டறியப்பட்டு மாணவரின் உறவினர்களை அவர்களின் வீட்டில் சந்தித்து தமிழக அரசின் கல்வி சார்ந்த நலத்திட்டங்களை தெளிவாக எடுத்து கூறி மேற்கண்ட மாணவனை தொடர்ந்து பள்ளிக்கு வந்து கல்வி பயில கேட்டுக்கொண்டதன் பேரில் உடனடியாக அந்த மாணவனை பள்ளிக்கு வரவழைக்கப்பட்டு தொடர்ந்து கல்வி பயில தேவையான வழிமுறைகளை கூறி பள்ளி வரவேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

பள்ளி மாணவரும் இனி தொடர்ந்து பள்ளிக்கு வருவதாக உறுதி அளித்துள்ளார்.

## பழனி ஆயக்குடி பேரூராட்சி அலுவலக அருகில் மலை போல் குவிந்து கிடக்கும் குப்பைகளால் பொதுமக்கள் அவதி புகார்




பழனி மார்ச் 15

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ளது ஆயக்குடி பேரூராட்சி. இங்கு 18 வார்டுகள் உள்ளது 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இங்கு 18 வார்டுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை பேரூராட்சி அருகில் உள்ள இடத்தில் வைத்து மக்கும் குப்பைகள் ,மக்காத குப்பைகளை தரம் பிரிப்பதற்கான இடத்தில் சுமார் ஐந்து டன் இருக்கும் மேலாக குப்பைகள் குவிந்து கிடக்கிறது. கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரிப்பதற்காக கொட்டப்பட்ட குப்பைகள் எதுவும் குப்பைகள் தரம் பிரிக்காமல் கொட்டப்பட்டு உள்ளதால் அருகில் இருக்கக் கூடிய குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் மூச்சுத் திணல் மற்றும் ஆஸ்துமா போன்ற பிரச்சனைகளுக்கு உட்படுவதாகவும் அதேபோல சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் துர்நாற்றத்துடன் கடந்து செல்வதாகவும் ,பாதயாத்திரை வரும் பக்தர்கள் இந்த பகுதியில் பேரூராட்சி அலுவலகத்தில் இரவு நேரங்களில் தங்கி செல்வர்.

இந்த குப்பையால் வரும் துர்நாற்றத்தால் பாதயாத்திரை வரும் பக்தர்களும் முகம் சுளித்தபடி சென்று வருகின்றனர்.

இதுகுறித்து பேரூராட்சி அதிகாரிகளிடம் கேட்டபோது குப்பை கொட்டுவதற்கான இடம் எங்கும் இல்லை என்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் பகுதியில் சட்ட பாறை என்னும் இடத்தில் குப்பைகள் கொட்டுவதற்கு தேர்வு செய்து இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்ட போது அருகில் இருந்த விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக கூறி விவசாயிகள் போராட்டம் செய்ததாகவும் இதனால் குப்பைகளை கொட்ட முடியாமல் அவதி அடைவதாகவும் தெரிவித்துள்ளனர். இது குறித்து இன்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேரூராட்சி அலுவலகத்தில் மனு அளித்துவிட்டு வந்தவர்கள் தொடர்ந்து இந்த குப்பைகளை அகற்றபடவில்லை என்றால் அடுத்தகட்டமாக பொதுமக்களை திரட்டி முற்றுகை போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்துள்ளனர்..

## திருப்புவனத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி




மாமாமதுரை, மார்ச்.15

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருப்புவனத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிகுமார் முன்னிலையில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்வில் தாய்மார்களுக்கு பல்வேறு கருத்துக்களை வழங்கி எதிர்கால சந்ததியினரை சிறப்பான முறையில் வார்த்தெடுத்து வளர்க்க வேண்டும் என கூறினார்கள் இந்நிகழ்வில் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கடம்ப சாமி, மாவட்ட விவசாய அணி டி.ஆர்.சேகர், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பையா, மடப்புரம் மகேந்திரன், மருது ,ஈஸ்வரன், மாதேவன் ரமேஷ் குமார், வட்டார மருத்துவர் சுகுணா அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலர் ஜெயசுதா, அங்கன்வாடி பணியாளர்கள் பொதுமக்கள் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்..

## திண்டுக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு மருத்துவம் தொழில் சார்ந்த ஆங்கில தேர்வுக்கான பயிற்சி

திண்டுக்கல், மார்ச்.15

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவம் தொழில் சார்ந்த ஆங்கில தேர்வுக்கான பயிற்சி (Occupational English Test) தாட்கோ வாயிலாக வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்(தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு



மருத்துவம் தொழில் சார்ந்த ஆங்கில தேர்வுக்கான பயிற்சி (Occupational English Test) அளிக்கப்படவுள்ளது.

இதற்கான தகுதிகள் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கு பி.எஸ்.சி/எம்.எஸ்.சி நர்சிங் பட்டப்படிப்பு, போஸ்ட்பேசிக் பி.எஸ்.சிநர்சிங், மற்றும் பொது செவிலியர் மருத்துவப் படிப்பு ஆகிய படிப்புகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது 21 முதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்காக கால அளவு இரண்டு மாதமும் விடுதியில் தங்கி படிப்பதற்கான செலவினத் தொகை தாட்கோவால் அளிக்கப்படும்.

இப்பயிற்சி முடித்தவுடன் தகுதியான நபர்களுக்கு, பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக அயல்நாடுகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்.



சென்னை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையில் முதல்வர் மருந்தகம் தொடர்பான அனைத்து மாவட்ட இணை பதிவாளர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆய்வுக்கூடம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை முதன்மைச் செயலாளர் சத்யா பிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களில் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) அம்ரித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இளையான்குடியில் காலநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம்



இளையான்குடி மார்ச்.15


சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியத்தில் உள்ள டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பாக தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் இந்தியா காலநிலை அறிவியலை எதிர்த்து போராடுமா? குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் ஜாபருல்லா கான் தலைமை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் இயற்பியல் துறை தலைவர் முனைவர் முஷ்டாக் அகமத்கான் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மேனாள் மாநில தலைவர் மதுரா கல்லூரியின் மேனாள் விலங்கியல் துறை தலைவர் முனைவர் தினகரன் காலநிலை குறித்த சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் பேராசிரியர் கலீல் அகமது முனைவர் சையது அபுதாகிர் வாழ்த்துரை வழங்கினர். வினாடி வினாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விஞ்ஞான துளிர் அறிவியல் இதழ் வழங்கப்பட்டது. முனைவர் காஜா முகைதீன் நன்றி கூறினார். பேராசிரியை முனைவர் ஹெலன் தொகுத்து வழங்கினார். இயற்பியல் துறை மாணவ மாணவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## பெரியகுளம் அருகே கைலாசநாதர் மலைக்கோவிலில் பௌர்ணமி கிரிவலம்

பெரியகுளம் மார்ச் 15

கையிலாய வாத்தியம் சங்க நாதம் முழங்க பௌர்ணமி கிரிவலம் திருவண்ணாமலை கோயில் கிரிவலத்திற்கு அடுத்த படியாக தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.2001 மாசி மாதம் துவங்கப்பட்ட கிரிவலம் தொடர்ந்து 25 வது ஆண்டு கிரிவலத்தை முன்னிட்டு கைலாய வாத்தியம், சங்க நாதம் முழங்க சிவ! சிவ !! என்று பக்தர்கள் சிவ நாமத்தை சொல்லி கொண்டே பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.இந்த மலைக்கோயிலில் கிரிவலம் வந்து கைலாசநாதரை தரிசனம் செய்து வரும் பக்தர்கள் வேண்டியது நிறைவேற்றும் சக்தி வாய்ந்த இடம் என்று பக்தர்கள் கூறிவருகிறார்கள் . சிறப்பான அன்னதானத்தை பெரியகுளம் தொழில் அதிபர் ரிகிஸி குணசேகர் வழங்கினார். இந்நிகழ்சியின் ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் செய்திருந்தனர்.





## போடி பேருந்து நிலையத்தில் காணொளி மூலம் தமிழக பட்ஜெட்

தேனி.மார்ச் 15

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று தமிழ்நாடு பட்ஜெட் தாக்கல் உரை நடைபெற்றது.

பட்ஜெட்டை நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். தமிழ்நாடு பட்ஜெட் சென்னையில் 100 இடங்களில் நேரலை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து மேலும் தேனி மாவட்டம் போடி நகராட்சி சார்பாக நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் ஏற்பாட்டில் போடி பேருந்து நிலையத்தில் நேரலை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நகராட்சி ஆணையாளர் பார்கவி, முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சங்கர்,நகர்மன்ற உறுப்பினர் முருகேசன் மற்றும் நகராட்சி அதிகாரிகள் ஊழியர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.







கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடைபெற்ற இந்திய முதுநிலை தடகள கூட்டமைப்பு நடத்திய இந்திய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 2000 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் முதல் பரிசு, 400 மீட்டர் தடை ஓட்டத்தில் இரண்டாம் பரிசு, 100 மீட்டர் தடை ஓட்டம் இரண்டாம் பரிசு மற்றும் 400 மீட்டர் தொடர் ஓட்டம் இரண்டாம் பரிசு பெற்ற கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கீதாவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர். இரா. ஸ்டாலின் நேரில் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.



திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தத்துவ மேதை காரல் மார்க்சின் நினைவு தினம் அனுசரிக்கபட்டது. இதற்கு ஒன்றிய செயலாளர் குழந்தைவேல் தலைமை வகித்தார். மூத்த தோழர் ஸ்டாலின் கட்சி கொடியேற்றினார் அதனை தொடர்ந்து கட்சி அலுவலகம் முன்பாக வைக்கப்பட்டிருந்த காரல் மார்க்சின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாநிலகுழு உறுப்பினர் ஜி. ராணி, தாலுகாகுழு உறுப்பினர்கள் ஜபார் , லெட்சுமணன், மற்றும் மணவாளன், அசரப்அலி, அயூப் கான், செல்லப்பாண்டி, ரஞ்சித், பிரவீன், கார்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தேனியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி மார்ச் 15

தேனி பங்களா மேட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழகத்தில் பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி தமிழக அரசை கண்டித்து தேனி வடக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் விக்னேஷ் முன்னிலை வகித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழகம் முழுவதும் பெண்களுக்கு பாலியல் தொல்லை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை தமிழக அரசு தடுத்து நிறுத்தி பெண்களுக்கு



உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கண்டன கோஷங்கள் எழுப்பினர். பின்பு திமுக அரசை அகற்றிட கையெழுத்து இயக்கமும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரியகுளம் நகர செயலாளர் தினேஷ். மாவட்ட கழக மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள், பேரூர் கழக,வார்டு செயலா ளர்கள் மகளிர் அணி நிர்வாகி கள், இளைஞர் அணி நிர்வாகி கள்,தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் சக்கிமங்கலம் கிராமம் தேவிஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அம்மன் அருளை பெற்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் நகர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161